IPL புலமை மையம்

மாணவர்களை பாடசாலைக்கு தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவற்கும்

தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள்

மாதிரிப் பரீட்சை இல: 02

வினாத்தாள் - I

கட்டெண்: .....

பரீட்சைக்கு தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

- உமது கட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக் கோட்டில் மீது எழுதுக.
- மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது கட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.
- ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.
- செய்கை வேலைகளுக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகருக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
02	
03	
04	
05	
06	
07	
08	
09	
மொத்தம்	
இறுதிப்புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியிட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் நிட்டதற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளதென உறுதிப்படுத்துகின்றேன்.	
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென என உறுதிப்படுத்துகிறேன்.	
மதிப்பீட்டு புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப்புள்ளிகளும் உறுதிப்படுத்துகிறேன்.	
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன் இறுதிப்புள்ளி சரியாகும்	

www.ipl.edu.lk



zoom

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium


தமிழ்/ English


76667-4945


தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன


www.learneasy.lk || www.lkedu.lk

- 1ம் 2ம் வினாக்களில் ஆரம்பத்தில் தரப்பட்டுள்ள உருவை ஒத்த உரு இடம்பெறும் விடையைத் தெரிவுசெய்க.

1) 

I. 

II. 

III. 

2) 

I. 

II 

III. 

- 3ம் 4ம் வினாக்களில் பொருத்தமற்ற சொற்கூட்டம் இடம்பெறும் விடையை தெரிவு செய்க

3) I.

பறவை
பட்சி
புள்

II.

மன்னன்
வேந்தன்
அரசன்

III.

மலை
சிகரம்
குன்று

4) I.

ஆசிரியர்
மாணவன்
புத்தகம்

II.

வைத்தியர்
நோயாளி
வெண்கட்டி

III.

விவசாயி
வயல்
மண்வெட்டி

- 5ம் 6ம் வினாக்களில் இடைவெளிக்குப் பொருத்தமான விடையை தெரிவு செய்க.

5) சிங்கம் - கர்ச்சிக்கும் எனில், கரடி .....

I. சீறும் II. உறுமும் III. பிளிறும்

6) வெயில் - சூடு எனில், மழை .....


I. நீர் II. மேகம் III. குளிர்

www.lkedu.lk

- **7ம் 8ம் வினாக்களுக்கு கீழுள்ள படங்களை அவதானித்து விடை தருக.**
















7) ஒரே நேரத்தில் அதிகமான பயணிகளையும் பொருட்களையும் ஏற்றி செல்லக்கூடிய வாகனங்கள் இடம்பெறும் விடை எது?

I. Cம் Bம் II. Cம் Dம் III. Dம் Bம்

8) ஒன்றுக்கொன்று வேறுபட்ட போக்குவரத்து மார்க்கங்களை பயன்படுத்தும் வாகனங்களை கொண்ட விடை அல்லாதது எது?

I. G, D II. B, F III. A, C

- **9ம் 10ம் வினாக்களில் தரப்பட்டுள்ள எண்கோலங்களை அவதானித்து இடைவெளிக்கு பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

9)


6	7
43	


9	5
86	


4	9
?	

I. 29 II. 25 III. 85

10)







I. 27 II. 32 III. 37

www.lkedu.lk

- **11ம் 12ம் வினாக்களில் தரப்பட்டுள்ள வாக்கியங்களில் தடித்த எழுத்தில் உள்ள சொல்லுக்கு பதிலாக எழுதக்கூடிய சொல்லைத் தருக.**


11) மாணவர்கள் எல்லோரும் தத்தமது **இருக்கைகளில்** அமர்ந்து கொண்டனர்.

I. ஆசனத்தில் II. விரிப்பு III. ஆசனங்களில்

12) பரதனது செயலைப் பார்த்த இலக்குமணன் அவன் மீது **கடுங்கோபம்** கொண்டான்.

I. சினம் II. சாந்தம் III. அழுக்காறு

13) பின்வரும் உருக்களில் $\frac{1}{2}$ பகுதிக்கு நிறந்தீட்டப்பட்ட உரு எது?

I  II.  III. 

14) குமரன் திங்கட் கிழமையிலும் பார்க்க 50.00 ரூபாய் குறைவாக செவ்வாய்க்கிழமை செலவு செய்கின்றான். செவ்வாய்க்கிழமையிலும் பார்க்க ரூபாய் 80.00 குறைவாக புதன்கிழமை செலவு செய்கின்றான். திங்கட் கிழமையிலும் பார்க்க 60.00 ரூபாய் கூடுதலாக வியாழக்கிழமை செலவு செய்கின்றான். அவன் வியாழக்கிழமை ரூபாய் 230.00 செலவு செய்கிறான். எனில் அவன் நான்கு நாட்களும் செலவு செய்த பணம் எவ்வளவு?

I. ரூபாய் 520.00 II. ரூபாய் 560.00 III. ரூபாய் 490.00

15) அமலின் வயதின் 3 மடங்கு வயதுடைய ரவிக்கு இன்னும் மூன்று வருடங்களில் 27 வயது எனின், அமலின் நற்சோதரை வயது யாது?

I. 8வயது II. 9 வயது III. 10 வயது

16) ரவியிடம் 100 ரூபாய் நாணயத்தாள் 3உம் 50 ரூபாய் நாணயத்தாள் 2உம், 20 ரூபாய் நாணயத்தாள் 6உம் காணப்பட்டன எனின், ரவியிடம் காணப்படும் மொத்தத் தொகை எவ்வளவு?

I. ரூபாய் 500.00 II. ரூபாய் 480.00 III. ரூபாய் 520.00

17) கவினுடைய சகோதரியின் மகனான ரவிக்கு கவினுடைய மகன் சேகர் என்ன உறவு முறையாகும் ?


I. மருமகன் II. மச்சான் III. மாமா


www.lkedu.lk

18) 30 யிற்றும் 40யிற்றும் இடைப்பட்ட எண்களை எழுதும் போது இலக்கம் 3 எழுதப்படும் தடவைகளின் எண்ணிக்கை யாது?

I. 12 II. 11 III. 10

- **கீழுள்ள தகவல்களைக் கொண்டு 19ம் 20ம் வினாக்களுக்கு விடை தருக.**





19) ஒரு ப்பாரியின் விலை யாது?

I. ரூபாய் 90.00 II. ரூபாய் 70.00 III. ரூபாய் 110.00

20) 3 அன்னாசிகளினதும் இரண்டு ப்பாரிகளினதும் மொத்த விலை யாது?

I. ரூபாய் 420.00 II. ரூபாய் 390.00 III. ரூபாய் 400.00

21) உரோம இலக்கம் 5 இலிருந்து 18 வரை எழுதும் போது V எனும் குறியீடு எத்தனை தடவைகள் எழுதப்படும்?

I. 8 தடவைகள் II. 6 தடவைகள் III. 9 தடவைகள்


22) வீதியின் அலங்காரத் தோரணம் சிவப்பு, பச்சை, மஞ்சள், நீலம் என்ற ஒழுங்கில் கொடிகள் கட்டப்பட்டன. எனவே இவ்வொழுங்கில் 69வது கொடியின் நிறம் யாது?

I. பச்சை II. நீலம் III. சிவப்பு

23) அறபா மாடசாலையின் இல்ல விளையாட்டுப்போட்டி 2020 பெப்ரவரி 26ம் திகதியில் இருந்து தொடர்ச்சியாக 8 நாட்கள் நடைபெற்றது. எனின் விளையாட்டுப்போட்டி முடிவடைந்த திகதி யாது?

I. மார்ச் 3 II. மார்ச் 4 III. மார்ச் 2

24)



Aயில் இருந்து Dயிற்கு உள்ள தூரத்திற்கும் Dயில் இருந்து Cயிற்கு உள்ள தூரத்திற்கும் இடையிலான வித்தியாசம் எவ்வளவு?

I. 17cm II. 15cm III. 18cm

www.lkedu.lk

25) வரிசை ஒன்றின் நடுவில் நிற்கும் சுமாருக்கு முன்னால் 9 பேர் நின்றனர். எனின் அவ்வரிசையில் உள்ளோரின் மொத்த எண்ணிக்கை யாது?

I. 17 பேர் II. 19 பேர் III. 18 பேர்

- **1, 2, 3 ஆகிய எண்களுக்குப் பதிலாக A, B, C எனும் எழுத்துக்களைப் பயன்படுத்தி பின்வரும் கணிதச் செய்கைகள் செய்யப்பட்டன. இதற்கேற்ப வெற்றிடத்திற்குப் பொருத்தமான எழுத்துக்கள் யாவை?**

26) B + A = ... I. B II. C III. A

27) C × A = ... I. C II. A III. B

28) ஒருவர் நடந்து செல்லும் போது அவரது நிழல் வலது கைப்பக்கமாக விழுந்தது. இவர் பற்றிய கூற்றுக்களில் சரியானது எது?


I. இவர் காலை வேளையில் வடக்குதிசை நோக்கிப் பயணிக்கின்றனர்.

II. இவர் மாலை வேளையில் தெற்குதிசை நோக்கிப் பயணிக்கின்றனர்.

III. இவர் காலை வேளையில் தெற்குதிசை நோக்கிப் பயணிக்கின்றனர்.

29) ஒரு கம்பித்துண்டை இரண்டாக வெட்டுவதற்கு ரூபாய் 40.00 செலவாகியது. எனின் அதை நான்காக வெட்டுவதற்கு எவ்வளவு செலவாகும்?

I. ரூபாய் 100.00 II. ரூபாய் 120.00 III. ரூபாய் 135.00

30)  இவ்வுருவில் அவதானிக்க கூடிய முக்கோணிகளின் எண்ணிக்கை யாது

I. 2 II. 4 III. 6

www.lkedu.lk

- **கீழ்வரும் பாடலை வாசித்து 31, 32ம் வினாக்களுக்கு விடை தருக.**

பாம்பைக் கண்டால் நடுங்கிடுமே

பாய்ந்தே ஓடி நடுங்கிடுமே!

வீம்பாய் கத்திக் கேட்டிடுமே

விரோதி கண்ணில் பட்டிடுமே!

31)இப்பாடலில் குறிப்பிடப்படும் பிராணி எது?

I. ஆமை II. பாம்பு III. தவளை

32)பாடலில் குறிப்பிடப்படும் பிராணியின் எதிரி எது?

I. பாம்பு II. முதலை III. கழுகு

33)கவிதிகா தனது பெற்றோருக்கு 3வது பெண்பிள்ளை ஆவாள். அவளது தம்பிக்கு மூன்று சகோதரிகளும் இரண்டு சகோதரர்களும் காணப்பட்டனர். எனின் கவிதிகாவின் பெற்றோருக்கு எத்தனை பிள்ளைகள் உள்ளனர்?

I. 5 பிள்ளைகள் II. 7 பிள்ளைகள் III. 6 பிள்ளைகள்

34) ரமணியினதும் பவானியினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 29 வருடங்கள் ஆகும். ரமணி பவாணியை விட 7 வருடங்கள் மூத்தவள் எனின், பவானியின் வயது யாது?

I. 11 வருடங்கள் II. 18 வருடங்கள் III. 13 வருடங்கள்

35) நேற்று முன்தினத்திலிருந்து நாளை மறுதினம் வரையான நாட்களின் எண்ணிக்கை யாது?

I. 4 நாட்கள் II. 5 நாட்கள் III. 3 நாட்கள்

- **கீழ்வரும் விடயங்களை வாசித்து அதன் மூலம் உருவாகும் சொல்லைக் கண்டுபிடித்து சரியான விடையின் கீழ் கோடிடுக.**

36) முதலாவது எழுத்து காணியில் இல்லை சாணியில் உண்டு


இரண்டாவது எழுத்து தலையில் உண்டு மலையில் இல்லை

மூன்றாவது எழுத்து ஆனையில் உண்டு ஆணையில் இல்லை

இதற்கேற்ப உருவாகும் சொல் எது?

I. காதனை II. சாதணை III. சாதனை

www.ikedu.lk

37)  உருவில் தரப்பட்டுள்ள முக்கோணிகளைக் கொண்டு ஆக்கக்கூடிய திண்ம உரு எது?

I. கூம்பகம் II. நான்முகி III. சதுரமுகி


38)சேகரிடம் 5 ரூபாய் நாணயக்குற்றிகளும் 2 ரூபாய் நாணயக்குற்றிகளுமாக 9 நாணயக்குற்றிகள் காணப்பட்டன அவற்றின் மொத்தப் பெறுமதி ரூபாய் 33 எனின், அவனிடம் காணப்பட்ட ஐந்து ரூபாய் நாணயக் குற்றிகளின் எண்ணிக்கை யாது?


I. 5 II. 4 III. 6


39)மண்டபமொன்றில் 7 கதிரைகளைக் கொண்ட 6 நிரைகளும் 10 கதிரைகளை கொண்ட 5 நிரைகளும் காணப்பட்டன எனின், அம்மண்டபத்தில் காணப்படும் கதிரைகளின் அரைவாசி எண்ணிக்கை யாது?


I. 92 II. 46 III. 88

40) இவ்வலைப்படிவை மடி ஒட்டும் போது பெறப்படும் சதுரமுகியைத் தெரிவு செய்க?



I. 

II. 

III. 

www.lkedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

IPL புலமை மையம்

மாணவர்களை பாடசாலைக்கு தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்கும்

தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள்

மாதிரிப் பரீட்சை இல: 02

வினாத்தாள் - II

கட்டெண்: .....

பரீட்சைக்கு தொற்றும் உமக்குரிய சுதிவுறுத்தல்கள் :

- உமது கட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது கட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.
- ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கேடிடுக.
- செய்கை வேலைகளுக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகருக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
02	
03	
04	
05	
06	
07	
08	
09	
மொத்தம்	
இறுதிப்புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தோப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளதுவென உறுதிப்படுத்துகின்றேன்.	
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென என உறுதிப்படுத்துகிறேன்.	
மதிப்பீட்டு புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப்புள்ளிகளும் உறுதிப்படுத்துகிறேன்.	
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன் இறுதிப்புள்ளி சரியாகும்	

www.ipledu.lk

- **கீழ்வரும் பந்தியை வாசித்து அதன் கீழ் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை பந்தியிலிருந்து தெரிந்து எழுதுக.**

1. அவன் ஆச்சரியத்துடன் நோக்கினான். பின்னர் தன்னை சுதாகரித்துக் கொண்ட அவன் "வண்ணத்துப்பூச்சியே! நீ வானவில்லைப் போல் அழகாக இருக்கிறாய்" என்றான். அதற்கு வண்ணத்துப்பூச்சி, "என் அழகு மட்டுமே உனக்குத் தெரிகின்றது. எனக்குள்ள ஆபத்துக்களை நீ அறிவாயா?" என்று கேட்டது. இதைக் கேட்ட சீலன் "என்ன! உனக்கு ஆபத்தா? அதைப்பற்றிச் சொல்வாயா?" எனக் கேட்டான்.

1) பந்தியில் குறிப்பிடப்படும் பிராணி எது?

.....

2) அபாயம் என்பதன் ஒத்தகருத்துச் சொல் யாது?

.....

3) பந்தியில் இடம்பெறும் உவமைத் தொடரை எழுதுக?

.....

4) ஆ்ரீனை ஒன்றன்பால் இறந்தகாலச் சொல்லைக் குறிப்பிடுக?

.....

5) **எனக்குள்ள** எனும் சொல்லைப் பிரித்து எழுதுக?

.....

6) கீழ்க்காலும் கழியும் உள்ள ஒரு சொல்லைத் தெரிந்து எழுதுக?

.....

- **02 தொடக்கம் 04 வரையான வினாக்களுக்குரிய விடையை தரப்பட்டுள்ள அடைப்புக்குள் இருந்து தெரிந்து எழுதுக.**

2. கடந்த மாதம் நாம் கல்விச் ..... (சுற்றுலா / சுற்றுலா) சென்றோம்.

3. எமது நாடு இயற்கை ..... (வலம் / வளம்) நிறைந்த நாடு ஆகும்.

4. வழக்கின் முடிவில் நீதிபதியால் வழங்கப்படுவது .....(பிடியாணை / தீர்ப்பு) ஆகும்.

- **05 தொடக்கம் 07 வரையான வினாக்களில் தரப்பட்டுள்ள வாக்கியங்கள் சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் எழுதுக.**

5. தங்கையோடு நாயும் சந்தைக்குச் சென்றன. ( )

6. புலியைக் கண்ட மான் கூட்டம் சிதறி ஓடின. ( )

7. பூக்கள் மலர்ந்து மணம் பரப்பின. ( )

8. **கீழ்வரும் தொடர்களால் குறிப்பிடப்படும் தனிச் சொல்லை எழுதுக.**

I. பேருந்தில் பயணச்சீட்டு வழங்குபவர் .....

II. வழக்கு ஒன்றை தாக்கல் செய்பவன் .....

III.மாலையில் அல்லது இரவில் கூடும் சந்தை .....

www.lkedu.lk

9. **வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடைகளை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.**

I. தமிழ் மொழியில் உள்ள மெய் எழுத்துக்களின் எண்ணிக்கை ..... (12,18,216) ஆகும்.

II. பூ எனும் சொல்லில் உள்ள உயிர்க்குறி ..... (மடக்கேறும் அரவம், கீழ்க்கால், கீழ்க்காலும் கழியும்) ஆகும்.

III.வெற்றிலை எனும் சொல்லை பிரித்தெழுதினால் ..... (வெற்றி + இலை, வெறுமை + இலை, வெற்று + இலை) என வரும்.

10. **பின்வரும் சொற்களைச் சேர்த்தெழுதுக.**

I. அங்கும் + இங்கும் = ...

II.வயல் + காணி = ...

11. **பின்வரும் சொற்களுக்குரிய எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக.**

I. அமைதி .....

II.தூய்மையான் .....

12. **கீழவரும் படங்களின் பெயர்களை ஆங்கிலத்தில் எழுதுக.**

I.  .....

II.  .....

13. **பின்வரும் ஆங்கிலச் சொற்களின் கருத்தை தமிழில் எழுதுக.**


I. Hospital - ..... II. Farmer - .....

14. பின்வரும் சொற்களை சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் தருக.

I. நூலகம் - .....

II.புத்தகம் - .....

III.அப்பா வந்தார்? .....

15. 

கட்டத்தினுள் உள்ள இலக்கங்களை இரண்டுவரிசையில் எழுதும் போது கிடைக்கும் எண்ணுடன் பத்தைக் கூட்டினால் வரும் எண்ணை சொற்களில் எழுதுக.

.....

16. சேகு) 984 மணிகளையும் ரவி 1269 மணிகளையும் சேகரித்திருந்தனர். எனின், இருவரும் சேகரித்த மணிகளின் மொத்த எண்ணிக்கை யாது?

.....

.....

www.lkedu.lk

17. அக்கரைப்பற்றிலிருந்து அட்டாளைச்சேனை 4km 30m தூரத்தில் உள்ளது. ஒலுவில் அட்டாளைச்சேனையில் இருந்து 5km 900m தூரத்தில் உள்ளது. ஆகவே அக்கரைப்பற்றில் இருந்து ஒலுவில் எவ்வளவு தூரத்தில் உள்ளது?


.....

.....

18. ஒன்று தொடக்கம் 14 வரையுள்ள ஒற்றை எண்களை உரோம எண் முறையில் எழுதுக.

.....

.....

19. 

I. அருகில் உள்ள உருவில் நிழற்றப்பட்ட பகுதியை பின்னமாக தருக.

.....


II. நிழற்றப்படாத பகுதியை முழு உருவில் என்ன பின்னமாகும்.

.....

20. கார் ஒன்று 3L பெற்றோலில் 36km பயணம் செய்யும். அது 12L பெற்றோலை நிரப்பிக் கொண்டு 85km பயணித்ததாயின் எஞ்சிய பெற்றோலில் எவ்வளவு தூரம் பயணிக்கும்?

.....

.....

21. 

I. அருகில் உள்ள திண்ம உருவில் காணப்படும் விளிம்புகளின் எண்ணிக்கை யாது?

.....

II. இத்திண்ம உருவின் உச்சி, முகம், விளிம்பு என்பவற்றின் அதே எண்ணிக்கையைக் கொண்ட வேறொரு திண்மம் எது?

.....

22. பேருந்து ஒன்று மு.ப 8.25 மிற்கு பயணத்தை ஆரம்பித்து 4 மணித்தியாலம் 35 நிமிடங்கள் பயணித்து எனின், இதன் பயணம் முடிவடைந்த நேரத்தை தருக?

.....

.....

23. ஒரு வகுப்பில் உள்ள 32 மாணவர்களுக்கு ஒரு பெட்டியில் உள்ள பிஸ்கட்களை ஒருவருக்கு 6 என சமனாக பகிர்ந்த போது 8 பிஸ்கட்கள் எஞ்சியிருந்தன எனின், பெட்டியில் காணப்பட்ட பிஸ்கட்களின் எண்ணிக்கை யாது?

.....


.....

24. 350g நிறையுடைய பெட்டி ஒன்றினுள் 400g நிறையுடைய 6 அங்கர் பால்மா பைக்கற்றுக்களும் 250g நிறையுடைய 5 சீனிப் பைக்கற்றுக்களும் வைக்கப்பட்டன. தற்போது பெட்டியின் முழு நிறை யாது?

.....

.....

www.lkedu.lk

25. 

I. அருகில் உள்ள உருவின் சுற்றளவு யாது?

.....

.....

II. இவ்வுருவின் உள்ளே காணப்படும் செங்கோணங்களின் எண்ணிக்கை யாது?


.....

.....

26. விளையாட்டு வீரன் ஒருவன் ஒரு வேளைக்கு 1500ml நீர் வீதம் ஒரு நாளைக்கு 4 தடவைகள் நீர் அருந்துகின்றான். எனவே அவனுக்கு ஒரு மாதத்திற்கு தேவைப்படும் நீரின் அளவு யாது?

.....

.....

27. 


அருகில் தரப்பட்டுள்ள வரிப்படத்தின் படி Sற்கு எத்திசையில் P உள்ளது?

.....

28. அன்சாரின் வயது 12 ஆகும். அவனது தம்பியின் வயது 9 ஆகும். இன்னும் இரு வருடங்களில் இருவரினதும் வயதுகளின் கூட்டுத்தொகை யாது?

.....

.....

29. 

அருகில் காட்டப்பட்டுள்ளது மோட்டார் சைக்கிள் ஒன்றின் மானி வாசிப்பு ஆகும். மேலும் 1Km தூரம் ஓடிய பின்னர் மானி காட்டும் வாசிப்பை கீழே தரப்பட்டுள்ள வெற்று அடைப்பினுள் எழுதுக.



.....

- **30 தொடக்கம் 59 வரையான வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ் கோடிடுக.**

30. மனதை ஒரு நிலைப்படுத்தும் செயற்பாட்டின் படிமுறை எத்தனை?

I. 4 II. 5 III. 6 IV. 12

31. உடற்சக்தி அதிகமாக விரயமாகும் விளையாட்டு எது?

I. எல்லே II. கரம் III. சதுரங்கம் IV. தாயம்

32. இலங்கையில் உள்ள மாவட்டங்களின் எண்ணிக்கை யாது?

I. 22 II. 09 III. 26 IV. 25

www.lkedu.lk

33. ஒலிம்பிக் கொடியில் காணப்படும் 5 வளையங்களும் குறித்து நிற்பது.

I. 5 நாடுகள் II. 5 கண்டங்கள் III. 5 சமுத்திரங்கள் IV. 5 தீவுகள்

34. பின்வருவனவற்றுள் இலங்கையின் தேசிய அடையாளம் அல்லாதது

I. அல்லி II. நாகதாளி III. நந்திக்கடல் IV. நீலமாணிக்கம்

35. பின்வருவனவற்றுள் கட்புல, செவிப்புல சாதனங்கள் முறையே அமைவது

I. வானொலி, தொலைக்காட்சி II. பத்திரிகை, கடிதம்

III. பத்திரிகை, வானொலி IV. ஒலிபெருக்கி, கடிதம்

36. சுவரினை நிலைக்குத்தாக சரியாக கட்டுவதற்கு பயன்படும் உபகரணம் எது?

I. தூக்குக்குண்டு II. நிமிட்டம் III. சாந்தகப்பை IV. மணியாக

37.  அருகிலுள்ள உருவில் காணப்படும் இசைக்கருவி

I. மிருதங்கம் II. தபேலா

III. உடுக்கு IV. றபான்

38. பின்வருவனவற்றுள் கோடை காலங்களில் உண்பதற்கு சிறந்த பழம் எது?

I. மாம்பழம் II. வத்தகைப்பழம் III. பலாப்பழம் IV. வாழைப்பழம்

39. நஞ்சு அருந்திய ஒருவருக்கு வழங்கப்பட வேண்டிய பொருத்தமான முதலுதவி

I. நன்றாக குளிப்பாட்டல் II. நித்திரை செய்யவிடல்

III. வாந்தி எடுக்கச் செய்தல் IV. நன்றாக காற்றுப்பட விசிறுதல்

40. திருமண சடங்கின் போது நீரோடு தொடர்புடைய இனத்தவர்.

I. சிங்களவர் II. தமிழர் III. முஸ்லிம்கள் IV. கிறிஸ்தவர்கள்

41. சர்க்கரை, பலாக்காய் போன்றவற்றில் அதிகம் காணப்படும் போசணைக்கூறு எது?

I. புரதம் II. கொழுப்பு III. கனியுப்புக்கள் IV.காபோவைதரேற்று

42. இலங்கையில் தற்போது வேகமாக பரவி வரும் ஒரு தொற்றுநோய்

I. டெங்கு II. கொரோனா III. பீலேக் IV.மலேரியா

43. இலங்கையின் தேசிய கொடியில் தமிழ் மக்களைக் குறிக்க பயன்படுவது

I. பச்சை நிறம் II. சிவப்பு நிறம்

III. செம்மஞ்சள் நிறம் IV. கற்றிவர உள்ள மஞ்சள் நிறம்

www.lkedu.lk

44. கலாசித்தலுக்கு நெருப்பு எரிவதற்கும் பயன்படும் வாயு

I. ஐதரசன் II. காபனீரொட்சைட்டு III. நைதரசன் IV. ஒட்சிசன்

45. 

அருகில் உள்ள படத்தில் காட்டப்படும் பெரியார்

I .அறுகரிக தர்மபால II. cww.கண்ணகை

III. சேர்.பொ இரத்தினசபாபதி IV. வண.எஸ்.மஹிந்த

46. சீகிரியாக் குன்றோடு தொடர்புடைய மன்னன்

I. முகலன் II. காசியப்பன் III. தாதுசேனன் IV.மகாசேனன்

47. பின்வரும் தாவரங்களுள் மூலிகை தாவர வகையுள் அடங்காதது.

I. பூவரசு, ஆமணக்கு II. குப்பைமேனி, கற்றாளை

III.வேம்பு, துளசி IV. கற்பூரவள்ளி,துளசி

48. புல்லாங்குழல் ஒன்றில் காணப்படும் துளைகளின் எண்ணிக்கை

I. 11 II. 07 III. 09 IV.10

49. மரத்தின் இலைகள் இணைத்து கூடு அமைக்கும் பிராணி

I. வௌவால் II. மரங்கொத்தி III. தூக்கணாங் குருவி IV . செவ்வெறும்பு

50. பொதி செய்யப்பட்ட பொருள் ஒன்றை கடையில் வாங்கும் போது முதலில் அவதானிக்க வேண்டியது

I. உற்பத்தி திகதி II. காலாவதி திகதி

III. பொருளின் விலை IV. பொருளின் உள்ளீடுகள்

51. மிகச்சிறிய பொருட்களை பெரிதாக்கி பார்ப்பதற்கு பொருத்தமான உபகரணம்

I. கை வில்லை II. வளைந்த கண்ணாடி III. நுணுக்குக்காட்டி IV .தளவாடி

52. பின்வருவனவற்றுள் கடற்கரை இல்லாத மாவட்டம் எது?

I. அம்பாறை II. காலி III. யாழ்ப்பாணம் IV. பொலனறுவை

53. இலங்கையின் தேசிய விளையாட்டில் ஓர் அணியில் பங்குபெறும் வீரர்களின் எண்ணிக்கை யாது?

I. 08 II. 06 III. 11 IV. 07

54. காற்று வீசும் திசையை அறிய உதவும் உபகரணம்

I. திசைகாட்டி II. காற்று வேகமானி III. காற்றுத் திசைகாட்டி IV. வெப்பமானி

55. இலங்கை ஆங்கிலேயரிடம் இருந்து சுதந்திரம் அடைந்த ஆண்டு

I. 1948 II. 1950 III. 1970 IV. 1972

www.lkedu.lk



zoom

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

56. பற்று நோய் ஏற்படக் காரணமாக அமைவது

I. நுளம்பு குத்தினால்

II. அசுத்தமான நீரினை பருகுதல்

III. அசுத்தமான காற்றை சுவாசித்தல்

IV.செயற்கை நிறப்பொருட்கள் ,சுவையூட்டிகள் உண்ணல்

57. 

அருகில் உள்ள உருவப்படத்தில் மூலம் குறிக்கப்படுவது

I. இலங்கை அஞ்சல் II. இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்

III. இலங்கை போக்குவரத்து சபை IV. வைத்தியசாலை

58. பிராணிகளுக்கு தாவரங்கள் செய்யும் நன்மையாக அமையாதது.

I.தாவரங்கள் பிராணிகள் உயிர் வாழ்வதற்கு தடையாக இருக்கும்

II.பிராணிகள் இரவில் தங்குவதற்கு உதவுதல்

III. பிராணிகளுக்கான உணவினை வழங்குதல்

IV. பறவைகள் கூடு கட்ட உதவுதல்

59. அதிகமான மாவட்டங்கள் கொண்ட மாகாணம்

I. கிழக்கு மாகாணம் II. மத்திய மாகாணம்

III. வடமாகாணம் IV. தென் மாகாணம்

60. 'நீண்ட பாடசாலை விடுமுறைக் காலத்தை வீட்டில் எவ்வாறு பயனுள்ளதாக கழித்தோம்" எனும் தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டும்) எழுவாய் பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்.

.....

.....

.....

.....

.....

www.lkedu.lk